பக்கம்.

கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.

அசல் வழக்கு எண்.213/2022

வா.சா. 2– பாண்டி

நாள். 25.09.2025.

வா.சா.2 இன்று ஆஜராகி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

எனக்கு சொந்த ஊர் பலக்கனூத்து ஆகும். டிரைவராக வேலை பார்க்கிறேன். வாதி சேதுராமன் எனக்கு நெருங்கிய பழக்கமானவர் ஆகும். சின்னச்சாமிக்கும் எனக்கு நெருங்கிய பழக்க வழக்கம் இல்லை, அவரை தெரியும். சேதுராமன்தான் என் நீதிமன்றத்தில் சாட்சியம் சொல்ல அழைத்து வந்தார். சேதுராமன் பணம் வாங்கியதாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். சேதுராமனிடம் சின்னச்சாமி பணம் வாங்கினார். 8 லட்ச ரூபாய் 15.10.2019அன்று வாங்கினார். சேதுராமன் பால்வியாபாரம் செய்கிறார். சேதுராமன் சின்னச்சாமி வீட்டில் பால் கறப்பார். புரோநோட்டை பணம் வாங்கிய போது அதில் உள்ள விவரங்கள் எழுதப்பட்டது. அதில் உள்ள விவரங்களை சேதுராமன்தான் கூறினார். சின்னசாமி பணம் வாங்கும் போது சின்னச்சாமியின் மனைவியோ, பிள்ளைகளோ அருகில் இல்லை என்றால் சரிதான். அதனால் அவர்களுக்கு சின்னச்சாமி வாங்கிய தாவா கடனை பற்றி தெரியாது என்றால் சரிதான். சின்னச்சாமி கடன் வாங்கிய போது சில்லரை கடனுக்காக என்று சொல்லி வாங்கினார் . வட்டி 100க்கு ரூ.1/– என வாங்கினார். பணம் வாங்கிய போது யார் உடன் இருந்தார்கள் என்றால் நானும் வடிவேலும் இருந்தோம். வடிவேல் எந்த ஊர் என்றால் ஒட்டன்சத்திரம் ஆகும். சேதுராமனும் நானும் நண்பர்கள் என்றால் சரிதான். புரோநோட்டு எழுதப்பட்ட தேதியில் நான் எதற்காக சேதுராமன் வீட்டிற்கு போனேன் என்றால் நான் கடையிலிருந்தேன். சாட்சி போடும்படி சேதுராமன் சொன்னதால் நான் போனேன். பணம் கொடுக்கும் போது எழுதப்பட்ட ஆவணத்தில் சாட்சி கையொப்பமிட்டேன். இரண்டு புரோ நோட்டுக்கள் எழுதப்பட்டது.

என்னையும் வடிவேலையும் சின்னச்சாமிதான் அழைத்து சென்றார் என்றால் என்னை அழைத்து சென்றார். நான் போகும் போது வடிவேல் சின்னச்சாமி வீட்டில் தான் இருந்தார். நான் போன பின்புதான் சேதுராமன் வந்தாரா என்றால் நானும் சேதுராமனும் தான் ஒன்றாக போனோம்.

சின்னச்சாமி நான்போன பின்புதான் வீட்டிற்கு வந்தார். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1,மற்றும் வா.சா.ஆ.2. ஆகிய ஆவணங்களில் உள்ள சின்னச்சாமியின் கையொப்பத்தில் வேறுபாடு இருக்கிறது என்றால் இருக்கிறது. இரண்டு ஆவணங்களிலும் உள்ள சின்னச்சாமியின் 4 கையொப்பங்களும் வேறுபாடுகளுடன் இருக்கிறது என்றால் சரிதான். மேற்படி கையொப்பங்கள் சின்னச்சாமியின் கையொப்பங்கள் இல்லை என்றால் சரியல்ல. சின்னச்சாமி சேதுராமனிடம் எந்த பணமும் வாங்கவில்லை என்றால் சரியல்ல. சேதுராமன் எனக்கு நெருங்கிய நண்பர் என்பதால் சின்னச்சாமி பணம் வாங்கி கொண்டு புரோநோட்டில் கையொப்பம் போட்டார் என பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை –இல்லை**

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P VELMURUGAN

Digitally signed by P VELMURUGAN
Date: 2025.09.25 08:28:48 +0530

Additional District Judge,

Dindigul.